## கம்பொல நகர சபை

## கண்டி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 19 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படையினை வழங்குவதற்காக போதியளவு மற்றும் பொறுத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெற்றுக்கொள்வதற்காக எனக்கு முடியுள்ளது. அதன் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 154 காணிகள் மற்றும் 201 கட்டடங்களின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது, சிங்ஹாபிடிய மற்றும் கீரபனே 02 பல் தொழில் கட்டடங்களுக்கு மின்சார தொடர்பு பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மின்சார சபைக்கு செலுத்தியிருந்த ரூபா 35,000 இற்கான பெறுமதியினை மூலதன செலவுகள் என கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும், மீண்டுவரும் செலவு ஒன்றென செலவு விடயம் 34453 இற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைத்திருந்த கழிவுத் தொகை ரூபா 26,579 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மக்கள் வங்கியின் இலக்கம் 535 கொண்ட நடைமுறைக் கணக்கில் உண்மையாக மீதி ஒன்று காணப்படாவிடினும், ரூபா 9,500 இற்கான வங்கி மேலதிக பற்று ஒன்று கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த ரூபா 49,882,781 இற்கான சம்பள மீளளிப்பு ஒவ்வொரு வருமானத் தலைப்பின் கீழ் பங்கீடு செய்யப்படாமல் நிருவாக மற்றும் பதவியணி சேவையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 1972 இன் 07 இலக்க வீட்டு வாடகைச் சட்டத்தின் கீழ் வாடகையாளர்களால் மீளாய்வாண்டின் போது வைப்புச் செய்திருந்த வீட்டு வாடகை வைப்புக்கள் ரூபா 21,782 தொகையினை வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) இலங்கை வங்கியின் இலக்க 2499454 கொண்ட நடைமுறை கணக்கின் மீதி ரூபா 22,721 ஆக காணப்பட்டதுடன் அதனை ரூபா 69,938 தொகையென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால், ரூபா 47,217 இற்கான தொகை ஒன்று மிகையாக காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 13,055,917 ஆக காணப்பட்டதுடன், பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 10,457,680 என காணப்பட்டமையால் ரூபா 2,598,237 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 35,282,851 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,802,406 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 23,713,003 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 13,916,755 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகை ரூபா 44,782,262 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,207,539 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,822,895 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 3,384,644 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

----------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பாக ரூபா 49,909,360 தொகை ஒன்று கிடைத்திருந்த போதும், சம்பளங்கள் மற்றும் படிகள் ஆக ரூபா 64,851,413 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் ரூபா 14,942,053 தொகையொன்று சபை ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அத்துடன், அத்தொகை சம்பள மீளளிப்பு தொகை தவிர சபையின் மீண்டுவரும் வருமானத்தின் நூற்றிற்கு 23 இனை கொண்டிருந்தது.

2.3 தொழிற்பாடு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறைப் பொறுப்புக்கள் காணப்படும் விகிதாசாரம் 4 : 1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் விகிதாசாரமாக 3.9 : 1 மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களின் நூற்றிற்கு 87 ஆகிய ரூபா 117 மில்லியன் அறவிடப்படக்கூடிய துணை சேவைகள் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ஆகக் காணப்பட்டதுடன், மொத்த நடைமுறை பொறுப்புக்களின் நுற்றிற்கு 70.8 ஆகிய ரூபா 24 மில்லியன் செலவுக் கடன்பட்டோரை கொண்டிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

-----------------------------

(அ) வீத வரி

-------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 29,121,425 இற்காக நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், ஆண்டின்போதான பில் போடப்பட்டவை ரூபா 31,298,641 ஆக காணப்பட்டது. ஆண்டிற்கான அறவீடுகள் சதவீதம் நூற்றிற்கு 50.8 ஆக காணப்பட்டதுடன், 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 35,703,700 இற்கான மீதியொன்று நிலுவையாக காணப்பட்டதுடன் 2014 ஜுலை 31 திகதியில் உள்ளவாறு ரூபா 25,460 தொகையொன்று தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) வாடகை

-----------

2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 1,628,401 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், 2014 ஜுலை 31 திகதியில் உள்ளவாறு ரூபா 168,636 தொகையொன்று தொடர்ந்து நிலுவையாக காணப்பட்டது.

(இ) நீதிமன்றத் தண்டப்பணம்

------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 379,415 ஆகக் காணப்பட்டதுடன், 2014 செப்டம்பர் 17 திகதியில் உள்ளவாறு ரூபா 50,000 தொகையொன்று தொடர்ந்தும் நிலுவையாக காணப்பட்டது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 316-319 இன் பிரகாரம் பணம் மற்றும் சமமான பெறுமதியுடைய அடிப்படைப் புத்தகங்கள் வைத்திருத்தல் மற்றும் குறிப்புக்கள் பதிதல், நிறைவேற்று தர அலுவலர் ஒருவரின் பொறுப்பில் காணப்பட வேண்டும். எனினும், சபையின் வருமான பிரிவு பெண் தொழிலாளர் ஒருவரின் பொறுப்பில் அடிக்கட்டை புத்தகங்கள் காணப்பட்டன. பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2013 திசெம்பர் 19 திகதியில் காணப்பட்ட புத்தகங்களின் மீதி ரூபா 3,057 ஆகும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------

2011 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 35,000 தொகை மற்றும் 2012 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 100,000 ஆக மொத்தம் ரூபா 135,000 முற்பணமாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை.

3.3 செயற்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 167,950 பெறுமதியான 02 சொத்து வகைகள் 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை செயற்படுத்தாமல், நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப் பொருற்களை மண்ணினால் முடுதல் மேற்கொள்வதற்காக பெக்கோ இயந்திரம் ஒன்று வாடகைக்கு பெற்றிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,399,657 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பெக்கோ லோடர்

இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், கழிவுப் பொருள் முகாமைத்துவ மற்றும் ஏனைய விடயங்களுக்காக வெளி நிறுவனங்களில் பெக்கோ இயந்திரங்கள் வாடகைக்கு எடுப்பதற்காக 2013 ஆண்டில் ரூபா 1,399,675 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

3.5 சுற்றாடல் சிக்கல்கள்

-------------------------------

1988 இன் 56 இலக்கம் 2000 இன் 53 ஆம் இலக்கம் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்டிருந்த பிரமாணங்களின் பிரகாரம் 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளப்படவேண்டும் என சுட்டிக் காட்டியிருந்தது. இந்த ஏற்பாடுகளுக்கு முரணான சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் நடத்தப்படும் 37 சந்தர்ப்பங்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணத்தினால் சபைக்கு ரூபா 270,000 இற்கான தொகையொன்றினை இழக்க நேரிட்டிருந்தது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---------------------------------

மிளாய்வாண்டின் போது சபையினால் கூட்டினைப்புத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவுத் திட்டம்

-------------------------------

ரூபா 112 மில்லியனுக்கு அதிகமான செலவுகளை சபை மேற் கொண்டிருந்த போதும், மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

---------------------------------

சபையின் மிளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டடமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

----------------------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

4.5 அகக் கணக்காய்வு

----------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொண்டிருக்கவில்லை.

4.6 பாதீட்டு கட்டுப்பாடு

--------------------------

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பிட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது, 07 வருமான விடயங்களில் நூற்றிற்கு 03 தொடக்கம் நூற்றிற்கு 92 வரையும், 08 செலவு விடயங்களில் நூற்றிற்கு 08 தொடக்கம் நூற்றிற்கு 27 முதல் நூற்றிற்கு 86 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 04 வருமான தலைப்புக்கள் தொடர்பாக மீதி பாதீட்டு தொகையான ரூபா 176,343,698 இற்கான வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக இயலாதுள்ளது.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்